www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

5

## தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்

கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பிய தீசன் காலத்தில் பௌத்த மதம் இலங்கையில் பரவியபோது தத்து திலும் நடைமுறையிலும் முற்போக்கான அம்சங் ளைக் கொண்டதாக இருந் து. இந்தியாவிலும் சரி, இலங் கையிலும் சரி வைதீக இந்து மதத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு சமூகக் குழுக்களும், இனக் குழுக்களும் பௌத்த மதத்தை விரும்பி ஏற்றுக் கொண்டன. ங்கையிலும், பிராமணிய துக்கத்தால் பாதிக்கப்பட்டி த திராவிட (தமிழ்) சமூகக் க்களான ஆய், வேளிர், பர முக்குவர் போன்ற சமூ குழுக்கள் பௌத்த மத த தழுவிக்கொண்டன. இயற்கை வழிபாட்டையும், சிவவ பொட்டையும், நாகவழிபாட்டையும், கொண்டிருந்த இந்த இனச் சமூகக் குழுக்களை பிராமணர்கள், அரக்கர்கள் (இயக்கர்கள்) என்றும் நாகர்கள் என்றும் இழிந்துரைத்ததனால் ஏற்பட்ட முரண்பாடே பிராமணியத்திற்கு எதிராக பௌத்த மதம் இலங்கையில் வெகு வேகமாகப் பரவியதற்கு அடிப்படையாகும். அத்தோடு பௌத்த தம் இலங்கைக்கு வந்தபோது பின்னாளில் எழுதப்பட்ட மகா ம்சம்(1), குறிப்பிடுவதுபோல் விஜயனது வாரிசான சிங்கள னமோ சிங்கள மொழியோ த்துவமான இனமாகவோ மாழியாகவோ தோன்றியிருக்கவில்லை. அன்றைய இலங்கைப் பௌத்தர்கள் தமிழ் மொழியையும் அதன் கிளை ாழியான 'எலு' அல்லது 'ஈழ' ாழியையுமே பேசியவர்கள். ங்கையில் தென் பகுதியைப் பாலவே யாழ் குடாநாடும் பௌத்த வழிபாடு நிலவிய இடமாக இருந்தது என்பதை வல்லி ம், கந்தரோடை, நயினாதீவு, லான இடங்களில் கண்டெ க்கப்பட்ட சாசனங்கள் மூல மும் தொல்பொருள் சான்றுகள் மூலமும் அறிய முடிகின் (2)

### பௌத்த மதத்தில் பிளவு

ளத்த மதம் இலங்கைக்கு வதற்கு முன்பே அது தத்துவார்த்தப் பிளவுகள் காரணமாக 18 பிரிவுகளாக பிரிந்துவிட் ாலும் அதில் பிரதான பிரி பழைய 'தேரவாதப்' வ இலங்கைக்கு கொண்டு பட்டது. இந்தத் தேரவா ப் பிரிவு அதன் தொடக்க காலத்தில் பிராமணிய எதிர்ப்பு அம்சங்களையும் சீர் திருத்தக் துக்களையும் கொண்டதாக இருந்தது. ஆனால் நாளடைவில் மன்னர்களுடனான தொடர்பு அவர்கள் காட்டிய சலுகைகளுக்காக அது திரிபடைந்து விட்டது.

பிராமணிய கருத்துக்களும் பிராமணியச் சட்டங்களும் தேரவாதப் பிரிவுக்குள் புகுந்து கொண்டது. பௌத்த துறவியானவர் பொருளில் பற்றற்றவராகவும், தனது சொந்த ஈடேற்றத்தில் (நலனில்) அக்கறையற்றவராகவும் இருக்க வேண்டும் என்கிற கௌதம புத்தரது பிரதான கொள்கைக்கு மாறாக பௌத்த சங்கத்துக்கு சொத்துச் சேர்ப்பதிலும் அரசியல் தலையீடுகளைச் செய்வதிலும் தேரவாதப் பிரிவு ஈடுபடத் தொடங்கியதும் கி.மு.3 ஆம் நூற்றாண்டிலேயே பௌத்த மதத்திற்குள் ஒரு மிகப் பெரிய பிளவு ஏற்பட்டது.(3) புதிய பிரிவு தேரவாதப் பிரிவினரை சொந்த ஈடேற்றத்திற்கும் சொந்த விமோசனத்துக்குமாகப் பாடுபடும் கீழான வாழக்கை வாழ்பவர்கள் என்று விமர்சனம் செய்து, புத்த மதத்தை பின் பற்றுபவனது உன்னத இலட்சியம் கௌதம புத்தர் போல் அரசு சொந்த பந்தம் எதிலுமே பற்றற்ற துறவற வாழ்க்கை நடாத்தி முழு மனித குலத்தின் விமோசனத்திற்காக பாடுபடுவதாகும் என்று விளக்கம் சொன்னது. முழு மனித குலத்தின் விமோசனத்திற்காக பாடுபடும் ஒரு பௌத்தன் மகாயன (மகத்தான) வாழ்க்கை வாழவேண்டும் என்று இப்பிரிவு குறிப்பிட்டதால் இதற்கு மகாயானப் பிரிவு என்று பெயர் வந்தது.

> பௌத்த துறவியானவர் பொருளில் பற்றற்றவராகவும், தனது சொந்த ஈடேற்றத்தில் (நலனில்) அக்கறையற்றவராகவும் இருக்க வேண்டும் என்கிற கௌதம புத்தரது பிரதான கொள்கைக்கு மாறாக பௌத்த சங்கத்துக்கு சொத்துச் சேர்ப்பதிலும் அரசியல் தலையீடுகளைச் செய்வதிலும் தேரவாதப் பிரிவு ஈடுபடத் தொடங்கியது


### முரண்பாட்டின் அத்திவாரம்

தேரவாதப் பிரிவுக்கும் மகாயானப் பிரிவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் பிராமணியத்திற்கும், பௌத்தத்திற்கும் ஏற்பட்ட மோதலை விட மோசமாக இருந்ததாக அறியப்படுகின்றது. இது வெறும் சமய தத்துவார்த்த மோதலாக இல்லாமல், ஒருவரை ஒருவர் அழித்தொழிக்குமளவுக்கு உக்கிரமான மோதலாக இருந்தது.

இந்த மோதலில் தேரவாதப்பிரிவு மகாவிகாரை (அனுராதபுரம்)யின் தலைமையிலும், மகாயானப் பிரிவு அபயகிரி விகாரையின் தலைமையிலும் அணி சேர்ந்து நின்றது. இந்த அணி சேரல் இலங்கையில் இருந்த பௌத்தர்களையும் முரண்பாடு மிக்க இரண்டு அணியாகப் பிரித்தது.

### தமிழ்நாட்டின் பின்பலம்

இலங்கையில் இருந்த தேரவாத, மகாயான பௌத்த பிக்குகளிடையில் இருந்த போட்டியில், தேரவாதத்தை விட முற்போக்கான கருத்தைக் கொண்டிருந்த மகாயான பௌத்த பிரிவுக்கு தமிழ்நாடும், ஆந்திராவும் பின் பலமாக இருந்தன. தமிழ் நாட்டின் காஞ்சிபுரம், காவிரிப்பூம் பட்டணம், புத்த காஞ்சி, மதுரை, திருநெல்வேலி பௌத்தப் பள்ளிகளும், ஆந்திராவின் அமராவதி நாகர்சுனா, கொண்டா, பட்டிப்புரோலு பௌத்த பள்ளிகளும் மகாயன பௌத்தத்திற்கு பிரதான தளங்களாக இருந்தன. யாழ். குடாநாட்டிலிருந்த வல்லிபுரம், கந்தரோடை, நாகதீபம் (நயினாதீவு), மணிபல்லவம், விகாரைகள் கூட மகாயான பௌத்த விகாரைகள் என்றே அறியப்படுகின்றது. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை(4), காவிரிப்பூம் பட்டணத்தில் பௌத்தப் பள்ளியின் தலைவரான அறவண அடிகளார். குடாநாட்டிலுள்ள நாகதீபத்திற்கும் மணிபல்லவத்திற்கும், தென் இலங்கையிலுள்ள சிவனொளிபாத மலைக்கும் திருயாத்திரை சென்று வந்ததாகக் குறிப்பிடுகிறது. அதைவிட சோழ நாட்டுத் தமிழ் பிக்குவான சங்கமித்திரர் இலங்கைக்கு வந்து மகாயான பௌத்தத்தைப் பரப்பியதாகவும், இவரின் ஆலோசனையைக் கேட்டே மகாசேனன் என்ற மன்னன் தேரவாத பௌத்தத்தில் தலைமை விகாரையான மகாவிகாரையை இடித்துவிட்டு மகாயான பௌத்தத்தின் தலைமைப் பீடமான அபயகிரி விகாரையை கட்டியதாக மகாவம்சம் சொல்கின்றது.



கந்தரோடை பௌத்த விகாரை

### ஆரியத்தின் பக்கம் தேரவாதம்

மகாயான பௌத்தம், தமிழ் நாட்டையும், ஆந்திராவையும் சார்ந்து வளர்ந்தபோது தேரவாதப் பிரிவினர், வட இந்தியாவிலுள்ள அசோகனது மௌரியத் தலை நகருடன் தொடர்பு கொண்டு தங்களை ஆரியச் சார்பாளர்களாக காட்டிக்கொண்டு, பௌத்த மத மொழியாக இருந்த ஆரிய மொழியான பிராகிருத மொழியையே தங்கள் மொழியாக தூக்கிப் பிடித்ததாக நம்பப்படுகின்றது.(5) அதாவது மகாயான பௌத்த மத மொழியாக பிராகிருத மொழியைக் கொண்டிருந்தாலும், அதைக் கடைப்பிடித்த மக்களில் பெரும் பகுதியினர் தமிழர்களாக இருந்ததால் அதற்கு எதிராக பிராகிருத மொழியை (பாளி)யே தங்கள் மொழியாக்கி தாங்கள் ஆரியப் பாரம்பரியத்தை உடையவர்கள் என்று காட்ட தேரவாதப் பிரிவினர் எடுத்த முயற்சியே சிங்கள மொழியின் தோற்றத்திற்கு அடித்தளமாக அமைந்ததாகச் சொல்ல முடியும்.



தேவநம்பியதீசன் காலத்து விகாரை

### சிங்கள மொழியின் தோற்றம்

கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேரவாத மகாயான பிளவு ஏற்பட்டாலும் அவற்றுக்கிடையிலான தீவிரமான முரண்பாடு கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலேதான் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. இக்கால கட்டத்தில் தேரவாதப் பௌத்தத்தை கடைப்பிடித்த மக்கள் பேசிய தமிழ்மொழி மற்றும் அதன் கிளை மொழியான 'எலு' மொழியுடன் ஏற்பட்ட பிராகிருத மொழிக் கலப்பே நாளடைவில் திரிவுற்று புதிய மொழியான சிங்கள மொழியாக உருப்பெற்றதாக மொழியியலாளர்கள் கருதுகின்றார்கள்.(6) மகாவம்சம் சொல்வது போல் இந்த மொழி கிறிஸ்து சகாப்தத்திற்கு முன் இன்னும் குறிப்பாகச் சொன்னால் துட்டகைமுனுவின் (கி.மு.150) காலத்தில் தோற்றம்பெற்று விடவில்லை. சிங்கள மொழியின் பூரணத்துவமான தோற்றக்காலம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதி என்றே கருத முடிகிறது.

கி.பி 6 ஆம் 7 ஆம் நூற்றாண்டு வரையில் பிராகிருத மொழியிலேயே தேரவாத பௌத்த (சிங்கள) வரலாறு எழுதப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

### மகாவம்சக் கற்பனை

பௌத்த மதம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு 900 ஆண்டுகள் கழிந்த பின், அதன் வரலாற்றை எழுத முற்பட்ட பௌத்த பிக்கு - அதிலும் தேரவாத பௌத்த பிக்கு-மத அடிப்படையில் தான் கொண்டிருக்கிற காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே தேரவாத பௌத்தத்தின் வரலாறுதான் இலங்கையின் வரலாறு என்று திரித்து விட்டதுடன், தம்மை ஆரியர்களின் வாரிசாகக்காட்டி மத முரண்பாட்டை இன முரண்பாடாக காட்ட முற்பட்டுள்ளனர். வரலாற்றை ஆய்வு செய்வதற்காக நவீன உத்திகள் சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இன்றைய கால கட்டத்திலே கூட சரியான வரலாற்றை எழுதுவதில் இடர்பாடு இருக்கும்போது எந்த வசதிகளுமே இல்லாத 6 ஆம் நூற்றாண்டில் தேரவாதப் பிரிவு விகாரையின் குறிப்புகளை வைத்துக் கொண்டு எழுதப்பட்ட மகாவம்சத்தை கற்பனைக் கதை சொல்லும் ஒரு மத நூலாகத் தான் கருத முடியும்.

1. மகாவம்சம் கி.பி.6 ஆம் நூற்றாண்டில். மகா நாமன் என்ற புத்த பிக்குவால் எழுதப்பட்டது.
2. புஸ்பரத்தினம் ஈழத் தமிழர் வரலாறு
3. புத்த தத்துவவியல் ராகுல சாங்கித்தியாயன்
4. துறவு தந்த காப்பியம் பேராசிரியர் டாக்டர் முத்து சண்முகம் மதுரைப் பல்கலைக் கழகம்.
5. தமிழர்மேல் நடந்த பண்பாட்டுப் படையெடுப்புக்கள் - க. ப. அறபாணன்
6 யாழ்ப்பாணச் சரித்திரம் முதலியார் குலசபாநாதன்

**- நக்கீரன்**

படிப்பகம்